மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் தாமதம் என்பதிலே பல கசப்பான உண்மைகள் உள்ளன. அந்த பேரூராட்சிக்கு நிதி ஆதாரமே கிடையாது. எனவே கொடுக்க முடியாது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அரசியல்வாதிகள் மற்றவர்கள் எல்லோரும் மிகவும் முயற்சி எடுத்து, நாங்கள் நிதி ஆதாரத்தைப் பெருக்குகிறோம் என்று அங்கிருந்து தகவல் வந்தது. அதற்குமேல் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது. 1979-80 ஆண்டு அடிப்படையில் இப்போது 1983. எனவே மறு பரிசீலனை செய்து அதிகமான அளவு செலவாக இருந்தாலும், அந்த அடிப்படையில் குடிநீர் கொடுக்கலாம் என்ற அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் மறு பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடிக்கு குடிநீர் கொடுப்பதிலே நீண்ட தாமதத்திற்கு காரணம் சொன்னார்கள். அந்தக் காரணம் நிச்சயமாக வரவேற்க வேண்டிய காரணம்தான். இருந்தபோதிலும் கூட இன்றைக்கு அது சாங்ஷன் ஆகி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குறிப்பு இல்லையென்று நினைக்கிறேன். அந்த வேலைகள் நடந்து கொண்டு இருப்பதால் அந்த இளையான்குடிக்குப் பக்கத்திலே பரமக்குடியில் இ.இ. ஆபீஸ் இருக்கிறது பக்கத்திலுள்ள சிவகங்கையில் இ.இ. ஆபீஸ் இருக்கிறது. அந்த பேப்பர் சம்பந்தமாக விருதுநகருக்கு அனுப்பப்படுகிறது. அதை மாற்றி அமைத்து, பரமக்குடிக்கோ அல்லது சிவகங்கைக்கோ அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த் பேப்பரை எந்தெந்த ஆபீசுக்கு அனுப்ப வேண்டுமோ அந்தந்த அலுவலகத்திற்குத்தான் அனுப்ப வேண்டும் காரணம் காட்டி இந்த அலுவலகத்திற்குத்தான் அனுப்ப வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் பரிசீலனை செய்யலாம்.

சிவகாசி, திருத்தங்கல் நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.

* வினா எண் 31— திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி, திருத்தங்கல் நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், வேலை தொடங்கப்படாததற்கு காரணங்கள் யாவை?

(இ) அத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு முன் வருமா?

1983 பிப்ரவரி 4]

(ஈ) மேற்படி குடிநீர் திட்டத்திற்காக ஒதுக்கப்பட எண்ணியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சிவகாசி மற்றும் திருத்தங்கல் குடிநீர்த் திட்டங்கள் ஆய்வுப் பணிகள் முடிவடைந்து விட்டன.

(ஆ) சிவகாசி சம்பந்தப்பட்ட வரை, களப்பணி அலுவலர்கள் சமர்ப்பித்துள்ள குடிநீர்த் திட்ட அறிக்கையை (project Rep rt) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. அது முடிந்தபின் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஆவன செய்யப்படும்.

திருத்தங்களைப் பொறுத்தவரை களப்பணி அலுவலர்களால் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

(இ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து சிவகாசி மற்றும் திருத்தங்கல் குடிநீர் திட்டங்களுக்கான உத்தேச மதிப்பீடுகள் (ou line proposals) கிடைக்கப் பெற்றதும் அரசு நிர்வாக ஒப்புதல் அளிப்பது குறித்து பரிசீலிக்கும்.

(ஈ) அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்றதும் இக்குடிநீர்த் திட்டங்களுக்கான தக்க நிதி ஒதுக்கப்படும்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தைச் சேர்ந்த சிவகாசி, திருத்தங்கல் போன்ற இந்த ஊர்கள் தொழில் துறையிலே இன்றைக்கு வெகு வேகமாக முன்னணியிலே வந்து கொண்டிருக்கின்ற நகரங்கள். இந்த 2 ஊர்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டியது மிக அவசியமான, அவசரமானதும் கூட. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே அந்த குடிநீர் வழங்குவதற்காக என்னென்ன படிப்படியான நிலைகள் இருக்கிறதோ அதை விரிவாக எடுத்துச் சொன்னார்கள். உங்கள் மூலமாக அவரிடம் நான் பெற விரும்புவது என்னவென்றால், எப்போது இந்த பரிசீலனைகள், ஆய்வுகள், நிர்வாக ஒப்புதல்கள் எல்லாம் முடிந்து அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்? இது மிக முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தாலே, திட்டவட்டமாக அறிவிப்பு கொடுப்பார்களானால் உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தாலே இதை நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். ''Omission is better than commission'' என்று. எனவே இப்போதே மூன்று மாதத்தில் முடியும் என்று சொல்லி, முடியாமல் போனால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வருத்தம் வரும். எனவே விரைவில் முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி, திருத்தங்கல் சம்பந்தப்பட்ட நகரங்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த இரண்டு நகரங்களுக்கும் எந்த இடத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வரத் திட்டமிடப்பட்டு இருக்கிறது? எவ்வளவு காலத்தில் அந்தத் திட்டம் நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அர்ஜுனா ஆற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வு தயாரிக்கப்பட்டு வருகிறது.

விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள புதூர் நாகலாபுரம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 132— திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியிலுள்ள புதூர், நாகலாபுரம் பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் உள்ள புதூர் பேரூராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. விளாத்திகுளம் தொகுதியில் உள்ள நாகலாபுரம் ஊராட்சிக்கு குடிநீர் வழங்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) புதூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான மதிப்பீடு விரிவான ஆய்வு நடத்திய பின்னர் கணக்கிடப்படும்.

(இ) புதூர் குடிநீர்த் திட்ட ஆய்வுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதூர், நாகலாபுரம் ஆகிய இடங்கள் ஏற்கனவே நெல்லை மாவட்டத்தின் கடைகோடிப் பகுதியாக இருக்கின்றன. அந்த இடத்தில் எங்கு கிணறு தோண்டினாலும் உப்புத் தண்ணீர் தான் கிடைக்கும். ஆகவே, அந்தப் பகுதிகளில் கண்மாய்களைத் தோண்டி, மழைக் காலங்களில் கிடைக்கும் நீரைத் தேக்கி வைத்துத் தான் அந்தப் பகுதி மக்கள் தற்போது பயன்படுத்தி வருகிறார்கள். பெரிய முனிசிபல் நகரங்களுக்கு—குறிப்பாக